**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 491/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 27.01.2026.**

| | |
|---|---|
| **Name : சின்னதம்பி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கரட்டுகாட்டில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 10.05.2025 ம் தேதி மாலை 03.30 மணிக்கு எங்கள் வீடு உள்ள கரட்டுகாட்டு பகுதியில் வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் என் தந்தை மாரியப்பனும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ–2** ஆகும்.

2) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். கடந்த 10.05.2025 ம் தேதி மாலை 3.30 மணிக்கு கரட்டுகாட்டில் உள்ள எங்கள் வீட்டு முன்பாக ஊதாகுழல் இரும்பால் ஆனதை என் முன்பாகவும், மாரியப்பன் முன்பாகவும் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆகும். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) என் முன்னிலையில் கைப்பற்றிய போது யார் யார் இருந்தோம் என்றால் நானும் என் அப்பாவும் இருந்தோம். அந்த சமயத்தில் என் மனைவி எங்கிருந்தார் என்றால் வீட்டிற்குள் இருந்தார். போலீசாரிடம் இரண்டு கையொப்பமும் ஒரே

நேரத்தில் தான் போட்டேனா என்றால் ஆமாம். என் அப்பா உடனே இரு கையொப்பமும் செய்தாரா என்றால் ஆமாம். சம்பவம் பற்றி தெரியாது என்றால் ஆமாம். என் மனைவி சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம். ஊதாங்குழலில் தான் அடித்தார்கள் என்ற விவரம் யார் சொல்லி தெரியும் என்றால் என் மனைவி சொல்லி தான் தெரியும். எனக்கு யார் அடையாளம் காட்டியது என்றால் சம்பவம் நடந்த அன்று என் மனைவி ஊதாங்குழலை அடையாளம் காட்டினார்.

4) நான் பார்த்த போது என் மனைவிக்கு வெளிக்காயம் ஏற்பட்டிருந்ததா என்றால் இடது கையில் ரத்த காயம் இருந்தது. சாட்சி மீண்டும் கன்றிய காயம் ஏற்பட்டதாக கூறினார். நான் வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றும் கன்றிய காயம் ஏற்பட்டிருந்தால் மருத்துவர் அறிக்கையில் வெளிக்காயம் ஏற்பட்டதாக சொல்லியிருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மதியம் 2.30 மணிக்கு சென்றேன். மருத்துவமனைக்கு யார் யார் சென்றோம் என்றால் நானும் என் மனைவியும் சென்றோம். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் 10 நாட்கள் கழித்து விசாரித்தார்கள்.

6) இடையில் நான் போலீசாருக்கு தகவல் கொடுக்க முயற்சி செய்தேனா என்றால் என் மனைவி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்த பிறகு போலீசார் வந்து விசாரித்தனர். வீட்டிற்கு வந்து தான் புகார் வாக்குமூலத்தில் என் மனைவியிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆமாம். மருத்துவமனையில் வாக்குமூலம் கொடுத்தோம், ஆனால் அதை எடுத்துக் கொள்ளவில்லை. பிறகு வீட்டிற்கு வந்து வாங்கினார்கள்.

7) எதிரிகள் எனக்கு என்ன உறவு என்றால் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குள் ஏற்கனவே பிரச்சனை நடந்து வருகிறதா என்றால் இல்லை. எதற்காக சண்டை நடந்தது என்று என் மனைவியிடம் கேட்டு தெரிந்து

கொண்டேனா என்றால் அன்றையதினம் தான் பிரச்சனை நடந்தது. என் பாட்டி வீட்டில் இடித்த மண்ணை அப்புறப்படுத்திய போது சண்டை நடந்தது.

8) நான் சொல்வது போல் சொல்லும்நேரத்தில் போலீசாரிடம் நான் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்யவில்லை என்றும் அ.சா.1 என் மனைவி என்பதால் அவர் அளித்த தவறான புகாரின் பேரில் நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என் முன்பு எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 491/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 27.01.2026.**

| | |
|---|---|
| **Name : மாரியப்பன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கரட்டுகாட்டில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். என் மருமகளை சுப்பிரமணி என்பவர் அடித்ததாக சொன்னார்கள். கடந்த 10.05.2025ம் தேதி மாலை 03.30 மணிக்கு எங்கள் வீடு உள்ள கரட்டுகாட்டு பகுதியில் வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் என் மகன் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டபபடும் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் **அ.சா.ஆ–4** ஆகும்.

2) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. கடந்த 10.05.2025ம் தேதி எங்கள் வீட்டு முன்பாக ஊதாகுழல் இரும்பால் ஆனதை என் முன்பாகவும், சின்னதம்பி முன்பாகவும் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆகும். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு**

**சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) கடந்த 10.05.2025 ம் தேதியன்று மதியம் 2.00 மணிக்கு நான் மற்றும் சின்னதம்பி இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான இளவம்பட்டி சாலையில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.கடந்த 10.05.2025 ம் தேதி மாலை 03.30 மணிக்கு சுமார் 35 செ.மீ நீளமுள்ள இரும்பிலான ஊதுகுழல் என் முன்பாகவும், என் மகன் முன்பாகவும் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றிய போது சாட்சியாக இருந்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**